# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 31 ஆம் ஞாயிறு | 2 நவம்பர் 2025

**இறந்த நம்பிக்கையாளர் அனைவரின் நினைவுநாள்**

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்: குடும்பம் (உடன் பயணம்)

கடவுளை மையமாகக் கொண்ட குடும்பங்களைக் கட்டியெழுப்புவதற்கான நம்பிக்கையையும் உறவுகளையும் வலுப்படுத்த அழைப்பு

## கடவுளை மையமாகக் கொண்ட குடும்பங்களாக துயரத்தையும் எதிர்நோக்கையும் பகிர்ந்துகொள்தல்

இநவம்பர் மாதத்தை ஒருவருக்கொருவரின் துணையுடன் துயர் நிறைந்த நினைவுகளோடு தொடங்குகிறோம். வாழ்க்கையைக் கொண்டாடுவதன் மூலம் மட்டுமல்லாமல் துயரத்தையும் ஒன்றாக சுமப்பதன் மூலம் உறவுகளை வலுப்படுத்த நம்முடைய மாதாந்திர சிந்தனை நம் குடும்பங்களை அழைக்கிறது. நயீன் பட்டணத்தில் ஏற்கனவே அதிக இழப்பைச் சந்தித்த ஒரு தாயை ஒரு இறுதி ஊர்வலத்தில் இயேசு சந்திக்கிறார். அவர் பார்க்கிறார், நிறுத்துகிறார், பேசுகிறார், மீண்டும் நிலைநிறுத்துகிறார். வலியைக் கவனிக்கவும், நம்முடைய வேகத்தை நிறுத்தி, எதிர்நோக்கை எடுத்துரைக்கவும், அன்பில் செயல்படுவதும் தான் கிறிஸ்தவ உடன்பயணத்தின் ஒரு வழிமுறை.



மலேசியாவில் சபா, சரவாக் மற்றும் தீபகற்ப மலேசியாவில் உள்ள பல குடும்பங்கள் வேலையின் காரணமாக பிரிந்து வாழ்கின்றனர். புலம்பெயர்ந்தோர், மற்றும் மாணவர்கள் பிரிவினால் துயரத்தில் இருக்கின்றார்கள். பருவமழையினால் திடீரென்று சாதாரன நாட்கள் கூட இழப்பின் நாட்களாக மாறக்கூடும். கடவுளின் அன்பு இதுபோன்ற தூரங்களைக் கடந்து செல்ல உதவுகிறது என்பதை இறந்த நம்பிக்கையாளர் அனைவரின் நினைவுநாள் நமக்கு எடுத்துச் சொல்கிறது. யூதா மக்கபெயரைப்போல (2 மக்கபெயர் 12: 42-46) அன்பு கல்லறையோடு முடிவதில்லை. அது பரிந்துரையாக முதிர்ச்சியடைகிறது. புனித பவுல் நம் கண்களை ஏறெடுத்துப் பார்க்க உதவுகிறார். "நமக்கோ விண்ணகமே தாய்நாடு; அங்கிருந்து தான் மீட்பராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வருவாரெனக் காத்திருக்கிறோம். அவர் தமது ஆற்றலால் தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிக்குரிய தமது உடலின் சாயலாக உருமாற்றவும் அனைத்தையும் தமக்குப்பணிய வைக்கவும் வல்லவர். (Spe Salvi (ஒருவரின் இதயத்தைத் தொடுவதற்கு காலம் கடந்து போய்விடவில்லை அல்லது வீணாகிப்போவதுமில்லை

அன்பின் மகிழ்ச்சி (அமோரிஸ் லெடிசியா 193) குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் முதியவர்களின் கதைகளைக் கேட்பது நல்லது. அது அவர்களின் குடும்ப வாழ்க்கை வரலாற்றுடன் இணைந்திருப்பதை உணரவைக்கிறது...) வீடு என்பது நாம் மென்மையைக் கற்றுக்கொள்ளும் இடமாகவும், நம்பிக்கைக் கதைகளை கடத்தும் இடமாகவும் இருக்கிறது என்பதை திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு நினைவூட்டினார். இறந்தவர்களின் நம்பிக்கையைப் பற்றி அடுத்த தலைமுறைக்கு சொல்வது எதிர்நோக்கின் அமைதியான விளக்கமாகும். ஒரு ஆயர்மாமன்ற திருஅவை என்பது ஒன்றாக இணைந்து நினைவுகூரும் ஒன்றாகும். நம்முடைய இழப்புகளை உரக்கச் சொல்கிறோம். கண்ணீர்விட்டு அழுவதை அனுமதிக்கிறோம்; நம் அன்புக்குரியவர்களை கடவுளிடம் ஒப்படைக்கிறோம். நாம் பெற்றுக்கொள்ளும் இரக்கத்தை பிறருக்கும் இரக்கமாக மாற்றுகிறோம். அவ்வாறு செய்வதன்மூலம், நம்முடைய குடும்பங்கள் சிறிய அடைக்கல நகரங்களாக மாறுகிறது. அங்கு மீட்பரின் வாக்குறுதியால் பற்றுறுதி கொண்டு, நீண்ட காலமாக தாமதித்த மன்னிப்பு இறுதியில் பாயத்தொடங்குகிறது.

**இந்த வாரம்:** குடும்பத்தில் மரித்தவர்களுக்காக ஒரு நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுங்கள், துயரத்தில் இருப்போரை அழைத்துப் பேசுங்கள். அல்லது சென்று சந்தியுங்கள்.

> திருஅவை எப்போதும் இறந்தவர்களுக்காக இறைவேண்டல் செய்யும் பாரம்பரியத்தை வலியுறுத்தியுள்ளது. குறிப்பாக அவர்களுக்கு திருப்பலி ஒப்புக்கொடுப்பதன் மூலம், அது மட்டுமே நாம் அவர்களின் ஆத்துமாக்களுக்கு செய்யக்கூடிய சிறந்த ஆன்மீக உதவியாகும்.
>
> *திருத்தந்தை பிரான்சிஸ்*

**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா 25: 6-9

திருப்பாடல் 26: 1, 4, 7-9, 13-14

உரோமையர் 5: 5-11

லூக்கா 7: 11-17

INTERNAL CIRCULATION ONLY
BUL 44/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org